கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.எஸ்.மஞ்சுநாத், பி.எஸ்.ஸி

ந.க.எண்:197 / 2023 நாள்:27.02.2024

பொருள்: மனைப்பிரிவு –ஈரோடு மாவட்டம்– கொளப்பலூர் பேரூராட்சி – வரைபட அங்கீகாரம் – மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மாவட்டம் அவர்களால் மவ/ஈமா . எண்202/2023 என எண்ணிடப்பட்ட ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வட்டம் – கொளப்பலூர் பேரூராட்சி – வார்டு எண். 2 கோபி– தாராபுரம் ரோடு–கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண்கள். 92 / 3 , 97 / 1A2 இல் 9211.00 ச.மீ (அல்லது) 2.27 1/2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள " குறிஞ்சி நகர் " உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடத்திற்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் ந.க.எண். ERD / EBOJ7CRR/ 2023/ TCP நாள்.15.05.2023
2,கொளப்பலூர் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 11 / 2024 நாள். 22.02.2024
3. தொடர்புடைய ஆவணங்கள்.

****

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், கொளப்பலூர் பேரூராட்சி புதிய வார்டு எண். 2 கோபி – தாராபுரம் ரோடு, கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண்கள். 92 / 3 , 97 / 1A2 இல் 9211.00 ச.மீ (அல்லது) 2.27 1/2 ஏக்கர் பரப்பளவில் " குறிஞ்சி நகர் " குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வேண்டி விண்ணப்பித்ததின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொண்டு உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ / ஈ.மா எண் 202 / 2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு அமையும் இடத்தில் விதிமுறைகளின்படி கொளப்பலூர் பேரூராட்சி மற்றும் கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண்கள். 92 / 3 , 97 / 1A2 இல் 9211.00 ச.மீ (அல்லது) 2.27 1/2 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தார் சாலைகளின் நீளம் மற்றும் அகலம் கீழ்கண்ட விபரப்படி சரியாக உள்ளது எனவும், நல்லமுறையில் தார் சாலைகள் அமைக்கப்பட்டு சாலையின் இருபுறமும் மழை நீர்வடிகால் மற்றும் குடிநீர் குழாய்கள் விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும்

சாலையின் விபரம்

(1) **மனைப்பிரிவு சாலை எண் 1** : 9.0 மீட்டர் அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை 712.80 ச.மீ பூராவும்

(2) **மனைப்பிரிவு சாலை எண் 2** : 10.0 மீட்டர் அகல தென்வடல் மனைப்பிரிவு சாலை 1170.875 ச.மீ பூராவும்

(3) **மனைப்பிரிவு சாலை எண் 3:** 7.2 மீட்டர் அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை 367.65 ச.மீ பூராவும்

(4) **மனைப்பிரிவு சாலை எண் 4:** 9.0 மீட்டர் அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை 432.45 ச.மீ பூராவும்

(5) **மனைப்பிரிவு சாலை எண் 5:** 9.0 மீட்டர் அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை 139.05 ச.மீ பூராவும்

(6) **மனைப்பிரிவு சாலை எண் 6:** 7.2 மீட்டர் அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை 111.69 ச.மீ பூராவும்

(7) **மனைப்பிரிவு சாலை எண் 7:** விஸ்தரிப்பு சாலை 8.60 ச.மீ

ஆக மனைப்பிரிவு சாலைகள் 7க்கும் சேர்த்து 2943.115 சதுர மீட்டர் சாலை இடம் முழுவதும்.

இதற்கு, கூகலூர் (தொகுப்பு) பேரூராட்சி, இளநிலைப் பொறியாளரின் தரச்சான்று பெறப்பட்டுள்ளது. குடிநீர் வசதிக்காக ஆழ்குழாய் கிணறு நிறுவப்பட்டு, மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு மனைப்பிரிவு முழுவதற்கும் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவின் முன் பகுதியில் தார் சாலையின் ஓரத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. நில உபயோக மாற்றத்திற்கான தொகை கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண்.97 / 1A2 க்கு வழிகாட்டி மதிப்பு 1 ஏக்கருக்கு ரூ.8,70,000 /–வீதமும், ரீ.ச.எண்.92 / 3 க்கு வழிகாட்டி மதிப்பு 1 ஏக்கருக்கு ரூ. 5,00,000 /– பத்திரபதிவுத்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட விபரப்படிக்கு 2.27 1/2 ஏக்கருக்கு கணக்கீடு செய்யப்பட்டு, அதற்கு விதிமுறைகளின் படி 3 சதவீதம் தொகை ரூ.37,000/– ம் திட்டமில்லா பகுதிக்கு 01.12.2023 ம் தேதியன்றும், மனைப்பிரிவு மனைகளுக்கு கூராய்வுக் கட்டணம் ரூ.1000 /– வீதம் 46 மனைகளுக்கு ரூ. 46000 /– 06.12.2023 ம் தேதியன்றும் கோபி பாரத மாநில வங்கியில் மனுதாரரால் தொகை செலுத்தப்பட்டுள்ளது. சலான் நகல் பெறப்பட்டுள்ளது.

1.	பதிவுக் கட்டணம் (1 மனைப்பிரிவுக்கு ரூ.500 /– வீதம்)	ரூ. 500 /–
2.	மனைப்பிரிவு / உட்பிரிவு கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 0.75 /– வீதம்	ரூ. 6909 /–
3.	மனைப்பிரிவு ஆய்வுக் கட்டணம் ஒரு ஏக்கருக்கு ரூ.5000 /– வீதம் 2.27 1/2 ஏக்கருக்கு	ரூ. 15000 /–
4.	தெருக்கள் உரிமம் 1 மனைப்பிரிவக்கு ரூ.2000 வீதம்	ரூ. 2000/–

5.	கூராய்வுக் கட்டணம் 1 மனைக்கு ரூ.1000 வீதம் 46 மனைகளுக்கு	ரூ. 46000/–
6.	அங்கீகாரக் கட்டணம் 2.27 1/2 ஏக்கருக்கு	ரூ. 40000/–
7.	காலியிட வரி 01.04.2023 முதல் 31.03.2024 முடிய ஓராண்டிற்கு (46 மனைகளுக்கு) மொத்த பரப்பு: 9211.00 ச.மீ சாலைகள், பூங்கா, பொது உபயோக இடங்கள் பரப்பு: 3663.82 ச.மீ 46 மனைகளின் பரப்பு : 5547.18 ச.மீ (அ) 59710 ச.அடிகள் 1 சதுர அடிக்கு ரூ0.40 பைசா வீதம் சொத்து வரி + நூலக வரி = ரூ. 24123 /– (2 அரையாண்டிற்கு = ரூ.48,246/–)	ரூ. 48,246/–
8.	பாதுகாப்பு வைப்புத் தொகை	ரூ. 50,000/–
9.	13 எண்ணிக்கை தெருமின்விளக்குகள் அமைக்க உபகரணங்களுடன் கூடிய மொத்த கட்டணம் ரூ. 3,75,360/–னை கொளப்பலூர் பிரிவு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 31.01.2024 ம் தேதியன்று தொகை செலுத்தி இரசீது பெறப்பட்டுள்ளது	–
	மொத்தம் –	ரூ. 2,08,655/–

மேற்கண்ட தொகை ரூ.2,08,655/–னை செயல் அலுவலர், கொளப்பலூர் பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை எண்கள். 001734 / 02.02.2024, 001741 / 26.02.2024, (EQuitas Gobi.) ன் படி வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், பூங்கா, மூலை முடுக்குகள் கொளப்பலூர் பேரூராட்சி தானசாசனம் பத்திரப்பதிவு எண் 1471/ 2023 நாள்.02.05.2023 ன் மூலம் பேரூராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட அனுமதி வழங்க விதிமுறைகளின் படி அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டதால், கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

(மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு ம.வ / ஈ.மா. எண் 202 / 2023)

(கோப்பு ந.க.எண். ERD / EBOJ7CRR/ 2023/ TCP நாள்.15.05.2023 ல் கண்டுள்ளவாறு)

அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ / ஈ.மா .எண்.202/ 2023 ல் ஒதுக்கீடு விபரம்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண். 92 / 3 , 97 / 1A2 இல் 9211.00 ச.மீ (அல்லது) 2.27 1/2 ஏக்கர் பரப்பளவில்

		பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	2.27 1/2 ஏக்கர் (அ) 9211.00 ச.மீ	
ஒதுக்கிய மனைகள்		46 மனைகள்	
பொது ஒதுக்கீடு (உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு)		கோபி சார்பதிவக தான பத்திரம் ஆவணம் எண். 1471 /2023 நாள்.02.05.2023	
TANGEDCO க்காக உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு		கோபி சார்பதிவக தான பத்திரம் ஆவணம் எண். 1472 / 2023 நாள்.02.05.2023	
மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை			
மனைப்பிரிவு சாலைகள் பரப்பு		2943.12 ச.மீ	
உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு		34.16 ச.மீ	0.54 %
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கடிதத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை			
மின் பகிர்மான பொது உபயோகம் பரப்பு		59.75 ச.மீ	0.95 %
10 % பூங்கா 626.79 ச.மீ பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை உரிய அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.			

மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகள்:

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 – இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலையின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும், நகர் ஊரமைப்புத்துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

4.மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

5. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

6. மனைப்பிரிவினை சுற்றி மனுதாரரால் சுற்றுச்சுவர் (Compound Wall) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகில் இருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அகற்றப்பட வேண்டும்.

7. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

8. அமைக்கப்பட்ட சாலைகள் மற்றம் மழைநீர் வடிகால்களை தனது சொந்தச்செலவிலே ஐந்தாண்டுகளுக்கு பராமரிக்கப்பட வேண்டும்.

9. பொது ஒதுக்கீடு இடம் மற்றும் சாலைகள் ஆகியவை கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொளப்பலூர் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக இடங்களை பேரூராட்சிக்கு பட்டா மாறுதல் செய்து அளிக்க வேண்டும்.

10. மனைகள் மற்றும் தெருக்கள் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

11. மேலும் தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கு ஏற்ப மனுதாரர் அமைத்துத்தர வேண்டும்.

12. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனைவாங்கும் ஒவ்வொரு நபர்களுக்கும் மனைப்பிரிவு வரைபட நகல் மனுதாரரால் வழங்கப்பட வேண்டும்.

13. ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம், அவர்களின் ந.க.எண். ERD / EBOJ7CRR/ 2023/ TCP நாள்.15.05.2023 ம் தேதிய உத்தரவில் கண்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும், பின்பற்றப்பட வேண்டும்.

14. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பி பாதை, தந்திக் கம்பி பாதை அமைந்தால், கம்பி பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

15. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

16. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற் போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

17. மனைப்பிரிவில் அமையும் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

18. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை நகர் ஊரமைப்புத்துறைக்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியால் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

19. மனுதாரர் செயல் அலுவலர், கொளப்பலூர் பேரூராட்சி அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும், மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

20.மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

21. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியால் ரத்து செய்யப்படும்.

22. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

23. தள பரப்பு குறியீடு எண் (FSI) TNCDBR 2019ன் படி அனுமதிக்கலாம்.

24.கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால் அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

25. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனை உட்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்ச வரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

26. 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றம் நில உச்ச வரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலசீர்திருத்த சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின் அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

27. குடியிருப்பு மனைப்பிரிவிலிருந்து வெளியேறும் கழிவு நீர், நீர்நிலைகளில் கொண்டு விடக்கூடாது. மாற்று ஏற்பாடாக கழிவு நீரினை மனைப்பிரிவிற்குள்ளேயே Choke Pit அமைத்து, வெளியிடங்களில் கழிவு நீர் தேங்கா வண்ணம் பொது சுகாதாரம் பேணப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் முன்னறிவிப்பு ஏதுமின்றி ரத்து செய்யப்படும்.

செயல் அலுவலர்,
கொளப்பலூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்.

பெறுதல்

மனுதாரர். திரு. S. குமரேசன் மற்றும் மூவர்
கொளப்பலூர்
கோபிசெட்டிபாளையம் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

நகல்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , ஈரோடு மாவட்டம், அவர்களுக்கு தகவலுக்காக.
2. சார்பதிவாளர், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு தகவலுக்காக.
3. தலைவர், கொளப்பலூர் பேரூராட்சி அவர்களுக்கு தகவலுக்காக.

கொளப்பலூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்
<u>கூட்ட நடவடிக்கை குறிப்பு நகல்</u>

2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு கொளப்பலூர் பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மான நடவடிக்கை குறிப்பு:

முன்னிலை: திரு.ஆ.அன்பரசு, தலைவர், கொளப்பலூர் பேரூராட்சி.

பொருள்: 10	தீர்மானம்
ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கொளப்பலூர் பேரூராட்சி வார்டு எண். 2 கோபி – தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள கொளப்பலூர் கிராமம் ரீ.ச.எண்கள். 92 / 3, 97 / 1A2 ல் 9211.00 ச.மீ (அல்லது) 2.27 1/2 ஏக்கர் பரப்பளவில் 46 குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு) அவர்களின் ந.க.எண். ERD /EBOJ7CRR / 2023/ 2022 TCP நாள்.15.05.2023 ன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியும், அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஈ.மா.எண்.202 / 2023 என எண்ணிடப்பட்டு, உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க கோரி, உள்ளாட்சிக்கு வரப்பெற்ற மனுதாரர் திரு. எஸ்.குமரேசன் மற்றும் 3 நபர்கள், க.எண்.16, தாமு நகர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638452 என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும்.	தீர்மானம் எண்: 127 நாள்: 12.12.2023 பார்வையிடப்பட்டது. (ஒப்பம்) திரு.ஆ.அன்பரசு தலைவர் கொளப்பலூர் பேரூராட்சி.

(உண்மை நகல்)

12.12.2023
செயல் அலுவலர்
கொளப்பலூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்

12/12/2023